**வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**ந.க.எண்: 1900 /ஆ4/ 2026, நாள்.07.08.2026**

– – –

பொருள் : தேர்வுகள் –வேலூர் மாவட்டம் – ஜுலை–2026 முதல் இடைப்பருவத் தேர்வு முடிவுகள் – மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையிலான ஆய்வுக் கூட்டம் – நடைபெற்று முடிந்தமை –10.08.2026 அன்று சமூக அறிவியல் பாட ஆசிரியர்களுக்கான பகுப்பாய்வுக் கூட்டம் – கலந்து கொள்ள தெரிவித்தல் –சார்பு

பார்வை : வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டம் நாள் 31.07.2026

=========

பார்வையில் காணும் மதிப்பிற்குரிய வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் வேலூர் மாவட்ட பள்ளிக்கல்வி துறை ஆய்வுக்கூட்டம் நடைபெற்றதை தொடர்ந்து வேலூர் மாவட்டத்தில் ஜுலை–2026 முதல் இடைப்பருவத்தேர்வு முடிவுகள் சார்ந்து இத்துடன் இணைப்பில் காணும் பள்ளிகளின் சமூக அறிவியல் பாட ஆசிரியர்களுக்கான பகுப்பாய்வுக் கூட்டம் வேலூர், காந்திநகர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி (SSA)கூட்ட அரங்கில் எதிர்வரும் 10.08.2026 அன்று காலை 9.00 மணிக்கு கலந்து கொள்ள எதுவாக விடுவித்து அனுப்பிட சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

மேலும் எனவே இணைப்பில் காணும் சமூக அறிவியல் பாட ஆசிரியர்களை சமூக அறிவியல் பாடத்தில் மாணவர்கள் தேர்ச்சி சதவீதம் உயர்த்துவதர்க்கான செயல்த்திட்டம் (ACTION PLAN) மற்றும் கடந்த மூன்று ஆண்டுகள் சமூக அறிவியல் பாட தேர்ச்சி சதவீதம் ஆகியவற்றினை கட்டாயம் கொண்டு வரப்படவேண்டும் என்பதை அறிவுறுத்திட சார்ந்த பள்ளித்தலைமை ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு : சமூக ஆசிரியர்களின் பட்டியல்**

**//ஓம்.//**
**முதன்மைக் கல்வி அலுவலர் ,**
**வேலூர் .**

**பெறுநர்**

சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்கள் வேலூர் மாவட்டம்.

நகல்

- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை ) அவர்களுக்கு தொடர்நடவடிக்கையின் பொருட்டு அனுப்பப்படுகிறது.
- வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு தகவலின் பொருட்டு பணிவுடன் அனுப்பப்படுகிறது.
- முதல்வர் ,மாவட்ட ஆசிரியர் மற்றும் பயிற்சி நிறுவனம் ,இராணிப்பேட்டை அவர்களுக்கு தொடர்நடவடிக்கையின் பொருட்டு அனுப்பிவைக்கப்படுகிறது.